**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 19.11.2025.**

| | |
|---|---|
| **Name : கலா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எனக்கும் எதிரிகளுக்கும் தடப்பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம். அண்ணாமலை வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் நடுவே ரோடு செல்கிறது என்றால் ஆமாம். ரோட்டிற்கு கிழக்கு பக்கம் அண்ணாமலைக்கு இடம் உள்ளதா என்றால் இல்லை. அண்ணாமலையின் நிலம் ரோட்டிற்கு மேற்கு பக்கமும் என் வீட்டு வாசல் வரை உள்ளது என்றால் இல்லை. பஞ்சாயத்தில் ரோடு போடும் போது என் வீடு முன்பாக 10 அடி வரை சாலை அமைத்தார்கள் என்றால் இல்லை. நான் பிரச்சனை செய்து சாலை போடுவதற்கு இல்லாமல் செய்துவிட்டேன் என்றால் இல்லை. எதிரிகள் தான் பிரச்சனை செய்தார்கள்.

2) என் மீதும் சம்பவ சமயத்தில் நடந்த சம்பவம் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். அது பொய் வழக்காகும். அந்த வழக்கு குற்ற எண்.15/2022 என்ற எண்ணில் பதியப்பட்டு அந்த வழக்கில் நான் ஆஜராகி அபராதம் செலுத்தினேனா என்றால் ஆமாம். கடந்த 6 மாதத்திற்கு முன்பு அண்ணாமலை சந்திரா குடும்பத்திற்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு அது சம்மந்தமாக எங்கள் மீது மேச்சேரி காவல் நிலையத்தில் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம்.

3) நான் முதல் விசாரணையில் சொன்னவற்றை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதனை பதிவு செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். எனக்கும் எதிரிகளுக்கும் தடப்பிரச்சனை உள்ளது என்றும் வேண்டுமென்றே அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீதும் என் இரு மகன்கள் மீதும் 6 மாதத்திற்கு முன்பாக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். இதேபோன்று தடப்பிரச்சனைக்காக வழக்கு போட்டார்கள் என்றால் ஆமாம்.

4) தடப்பிரச்சனை சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தடம் எனக்கு இல்லை என்பதால் தான் நான் நீதிமன்றம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.20 13:20:03 +0530

Judicial Magistrate No.II,
Mettur.